# தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை 2008
# முக்கிய அறிவிப்பு

தமிழ்நாடு பொறியியல் சேர்க்கைக்கான பொது கலந்தாய்வு வருகின்ற 11.7.2008 முதல் துவங்க இருக்கிறது. அப்போது சிறப்பு கலந்தாய்வின் கீழ் வரும் ஓய்வு பெற்ற முன்னாள் இராணுவ வீரர்களின் மகன் / மகள்களுக்கான கலந்தாய்வு பொதுப்பிரிவில் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பெண் (cut-off mark) கீழ் கலந்தாய்விற்கு அழைக்கப்படுவார்கள். அப்போது அவர்களுக்கு முன்னாள் இராணுவ வீரர்களுக்கான சிறப்பு இட ஒதுக்கீட்டின் கீழ் வரும் பாடப்பிரிவு மற்றும் கல்லூரிகளுக்கான விவரங்கள் மின்திரையில் காண்பிக்கப்படும். அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப சிறப்பு இட ஒதுக்கீட்டின் கீழ் இருக்கையை தேர்வு செய்து கொள்ளலாம், அல்லது பொதுப்பிரிவிலும் தேர்வு செய்து கொள்ளலாம். ஆகையால் அவர்கள் தங்களுடைய நிர்ணயிக்கப்பட்ட மதிப்பெண்படி கலந்தாய்விற்கு வந்து கலந்து கொள்ளலாம். 3.7.2008 முதல் 10.7.2008 வரை (விளையாட்டு வீரர்கள் மற்றும் தொழில்நுட்பப் பாடப்பிரிவினர்க்கு கலந்தாய்வு நடைபெறுவதால்) இப்பிரிவில் தாங்கள் கலந்துகொள்ள இயலாது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம். ஓய்வு பெற்ற முன்னாள் இராணுவ வீரர்களின் சிறப்பு இட ஒதுக்கீட்டில் தகுதி பெறும் மாணவர்களின் விவரங்கள் அண்ணா பல்கலைக்கழக இணையதளத்தில் 10.7.2008 அன்று வெளியிடப்படும்.

செயலர்
(தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை)